திருத்தப்பட்டது

அறிக்கை அளிக்கக்கூடியது

இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் 4805/2019

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 29642/2016-லிருந்து எழுகிறது)

மங்காத்தாய் அம்மாள் (இறந்தவர்)

சட்டப்படியான சார்பாளர்கள்

மூலமாக மற்றும் பலர் .....மேல்முறையீட்டாளர் (கள்)

-எதிர்-

இராஜேஸ்வரி மற்றும் பலர் .....எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா

1. அனுமதி வழங்கப்பட்டது

2. பாகப்பிரிவினைக்கான உரிமை வழக்கில் தீர்ப்பாணை பெறுவதற்காக அசல் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட மு.வ. எண் 124/1990-இல் ஆரணி, கற்றறிந்த சார்பு நீதிபதி அவர்களால் வழங்கப்பட்ட 05.08.1992-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை உறுதிசெய்து, மேல்முறையீடு வழக்கு எண் 785/1992-இல் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 05.01.2016-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவினால் பாதிப்படைந்து, அதிருப்தியுற்றதாக உணர்ந்து, அதை தள்ளுபடி செய்வதற்கு 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.இம்மேல்முறையீட்டிற்கு வழிகோலிய பொருண்மைகள் பின்வருமாறு:

அசல் வாதிகளான இராஜேஸ்வரி என்பவரும், மற்றவர்களும், வழக்குச் சொத்துகளின் பாகப்பிரிவினைக் காகவும், தனிப்பட்ட சுவாதீனத்திற்காகவும், மு.வ. எண் 124/1990 என்ற உரிமை வழக்கைத் தாக்கல் செய்தனர்.வாதிகள் தரப்பு வாதம் யாதெனில், முதல் பிரதிவாதி, நாராயணசாமி முதலியார் என்பவரின் மனைவியாவார்.மேற்கூறப்பட்ட நாராயணசாமி முதலியாரும், 1-ஆம் அசல் பிரதிவாதியும் ஏழுமலை என்ற ஒரு மகனையும், ரங்கநாயகி, நாகபூஷணம் மற்றும் நவநீதம் ஆகிய மூன்று மகள்களையும் பெற்றிருந்தனர்.மகன் ஏழுமலையும், மகள் ரங்கநாயகியும் இறந்துவிட்டனர்.முதல் வாதி ஏழுமலையின் மனைவியாவார்.இரண்டாவது வாதியும், 3 முதல் 8 வரையிலான வாதிகளும் மரணமடைந்த ரங்கநாயகியின் கணவரும், குழந்தைகளுமாவர்.ஏழுமலைக்கும், முதல் வாதிக்கும் குழந்தையேதுமில்லை.அசல் வாதிகளின் கூற்றின்படி, நாராயணசாமி முதலியார், மூதாதையர்களின் சொத்தை விற்று, முதல் பிரதிவாதியான மங்காத்தாய் அம்மாள் (நாராயணசாமி முதலியாரின் மனைவி) பெயரில் சொத்துகளை வாங்கினார்.ஆகவே, நாராயணசாமி முதலியாரும், அவருடைய மகன் ஏழுமலையும் மூதாதையர் சொத்துகளில் அரை பங்கிற்கு உரிமையுடையவர்கள் என்பது வாதிகளின் தரப்பு வழக்காகும்.உரிமை வழக்கைத் தாக்கல் செய்வதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர், மேற்படி நாராயணசாமி முதலியார் இறந்துவிட்டார்.சொத்துகளில் அவருடைய பங்கு, ஏழுமலை, 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகளான நாகபூஷணம் அம்மாள் மற்றும் ரங்கநாயகி அம்மாள் ஆகியோரால் மரபுரிமையாகப் பெறப்பட்டது.உரிமை வழக்கு க்கல் செய்யப்படுவதற்கு சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு ரங்கநாயகி இறந்துவிட்டார், ஆகவே, சொத்துகளில் அவருடைய பங்கினை அவருடைய சட்டப்படியான சார்பாளர்களான 2 முதல் 8 வரையிலான அசல் வாதிகள் மரபுரிமையாகப் பெற்றனர்.நாகபூஷணம் 24.04.1990-ஆம் தேதியிட்ட விடுதலைப் பத்திரத்தை முதல் பிரதிவாதிக்கு ஆதரவாக நிறைவேற்றினார்.வாதிகளின் கூற்றின்படி, வழக்குச் சொத்துகளில் முதல் வாதி

5/8 பங்கிற்கு உரிமையானவர், 2 முதல் 8 வரையிலான வாதிகள் 1/8 பங்கிற்கு உரிமையானவர்கள் மற்றும் பிரதிவாதிகள் 1/4 பங்கிற்கு உரிமையுடையவர்களாவர் என்பதாகும்.வாதிகளின் கூற்றின்படி, பிரதிவாதி வழக்குச் சொத்துகளை கோர முயற்சி செய்ததையடுத்து, வாதிகள் பாகப்பிரிவினைக்காக இவ்வுரிமை வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

3.1. உரிமை வழக்கானது பிரதிவாதிகளால் எதிர்க்கப்பட்டது. முதல் பிரதிவாதியின் வழக்கின்படி, வழக்குச் சொத்துகளில் 1 மற்றும் 3-ஆம் இனவெண்களைத் தவிர, பிற சொத்துகள் முதல் பிரதிவாதியின் சுய சம்பாத்திய சொத்துகளாகும். முதல் பிரதிவாதியின் கூற்றுப்படி, முதல் இன சொத்தானது, அவரால் கொடுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு அவர் பெயரில் வாங்கப்பட்டதாகும்.முதல் பிரதிவாதியின் கூற்றுப்படி, வழக்குச் சொத்துகள் நாராயணசாமி முதலியாரின் மூதாதையர் சொத்துகளல்ல.மூதாதையர் சொத்துகளை விற்றே வழக்குச் சொத்துகள் வாங்கப்பட்டன என்பது மறுக்கப்பட்டது.1-ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கு யாதெனில், II-ஆம் அட்டவணையில் 1 மற்றும் 3-ஆம் இன சொத்துகளைத் தவிர, பிற சொத்துகள் அனைத்தும் அவருடைய பெற்றோர் வீட்டிலிருந்து சீதனமாகப் பெற்ற பணத்தைக் கொண்டும், அவருடைய தங்க அணிகலன்களை விற்றும் வாங்கப்பட்டவையாகும்.தங்கவேல் கவுண்டர் மற்றும் பிறரிடமிருந்து சொத்தை வாங்கிய பின்னர், அவர் வீடு கட்டி, அச்சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்துவருகின்றார் என்பதும் 1-ஆம் பிரதிவாதி தரப்பு வழக்காகும். 1-ஆம் பிரதிவாதியின் கூற்றின்படி, மரணமடைந்த நாராயணசாமி முதலியார் சர்வே எண் 218/ 1-இல் 47 சென்ட் நிலத்திற்கும் மற்றும் சர்வே எண் 218/ 3-இல் 8 சென்ட் நிலத்திற்கும் உரிமையுடையவராவார் மற்றும் மரணமடைந்த ரங்கநாயகியம்மாள், வழக்குச் சொத்துகளில் 1/5 பங்கிற்கு உரிமையுடையவராவார் என்பதாகும்.அதுபோன்றே, முதல் வாதியின் கணவரும் வழக்குச் சொத்துகளில் 1/5 பங்கிற்கு உரிமையுடையவராவார், அதில் முதல் வாதியும், முதல் பிரதிவாதியும் சமபாதி பங்குடையவர் ஆவார் என்பதுங்கூட முதல் பிரதிவாதியின் வழக்குரையாகும். முதல் பிரதிவாதியின்

கூற்றின்படி, முதல் பிரதிவாதியின் மகள் நாகபூஷணம், தன் பங்கு தொடர்பாக விடுதலைப் பத்திரத்தை நிறைவேற்றியுள்ளார். முதல் பிரதிவாதி ஒருபோதும் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தாவாக செயல்பட்டதில்லை என்பதும் அவரது தரப்பு வாதமாகும். அவருடைய கூற்றின்படி, அவர் 1 மற்றும் 2-ஆம் வாதிகள் மற்றும் நாகபூஷணம் அம்மாள் ஆகியோருக்காதரவாக 11.02.1987-ஆம் தேதியிடப்பட்ட உயிலை நிறைவேற்றினார். எனினும், உயிலின் பயனாளிகள் முதல் பிரதிவாதி மீது அக்கறை காட்டாததால், அவர் மேற்படி உயிலை 11.06.1990 அன்று திரும்பப்பெற்றுக்கொண்டார்.

3.2. 2 மற்றும் 3-ஆம் பிரதிவாதிகள் 1-ஆம் பிரதிவாதியின் கூற்றை ஆதரித்தனர். 2 மற்றும் 3-ஆம் பிரதிவாதிகளின் கூற்றின்படி, 1-ஆம் பிரதிவாதி தன்னுடைய சொத்தை அதன் மதிப்பிற்குரிய தொகைக்கு 3-ஆம் பிரதிவாதியிடம் அடகு வைத்தார். அது வாதிகளுக்கும் தெரியும். 1-ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை 2 மற்றும் 3-ஆம் பிரதிவாதிகளும் ஏற்றுக்கொண்டனர்.

3.3. அறிவார்ந்த விசாரணை நீதிமன்றமானது, பின்வரும் எழுவினாக்களை வனைந்தது:

" 1) வழக்கு அட்டவணைச் சொத்துகள் 1-ஆம் பிரதிவாதியின் கணவரான ஏழுமலை மற்றும் மரணமடைந்த நாராயணசாமி ஆகியோரின் முதாதையர் சொத்துகளா?

2) 1-ஆம் பிரதிவாதி குடும்பத்தின் கர்த்தா என்கின்ற அடிப்படையில் வழக்கு அட்டவணைச் சொத்துகளை நிர்வகித்து வந்தார் என்பது உண்மையா?

3) வழக்கு அட்டவணைச் சொத்துகள், கூட்டுக் குடும்பச் சொத்தாக, அனைத்து குடும்ப உறுப்பினர்களாலும் கூட்டாக அனுபவிக்கப்பட்டு வந்தது என்பது உண்மையா?

4) நாகபூஷணம் அம்மாள் அவர்களால் நிறைவேற்றப்பட்ட, 24.04.1990-ஆம் தேதியிடப்பட்ட விடுதலைப் பத்திரத்தின் அடிப்படையில், வாதிகள் பாகப் பிரிவினை கோர உரிமையுடையவர்களா?

5) 1-ஆம் பிரதிவாதி, வழக்கு அட்டவணைச் சொத்து தொடர்பான 11.02.1987-ஆம் தேதியிடப்பட்ட உயிலை வாதிகளுக்காதரவாக நிறைவேற்றி, பின்னர், அவ்வுயிலை 11.06.1990 அன்று திரும்பப் பெற்றுக் கொண்டார் என்பது உண்மையா?

6) வாதிகள், வழக்கு அட்டவணைச் சொத்துகளில் கூட்டாக சுவாதீனத்திலிருந்து வருகின்றனர் என்பது உண்மைதானா?

7) வாதிகள், வழக்கு அட்டவணைச் சொத்தில் 3/4 பங்கு பெற உரிமையுடையவர்களா?

8) தற்பொழுதைய உரிமை வழக்கானது முறையாக மதிப்பிடப்படவில்லையா?

9) வாதிகள் என்ன பரிகாரம் பெற உரிமையுடையவர்கள்?

3.4. விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக வாதிகளின் தரப்பில் நான்கு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ .1 முதல் வா.சா.ஆ .3 வரையிலான மூன்று ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. பிரதிவாதிகள் தரப்பில் இரண்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பி.சா.ஆ .1 முதல் பி.சா.ஆ .19 வரையிலான 19 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. விசாரணை நீதிமன்றமானது, இருதரப்பு வாய்மொழி மற்றும் ஆவணச் சான்றுகளைப் பரிசீலித்த பின்னர், வாதிகள் வழக்கு அட்டவணைச் சொத்துகளில் 3/4 பங்கு பெற உரிமையுடையவர்கள் என அறிந்து முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பித்தது. 1 முதல் 3 வரையிலான அசல் பிரதிவாதிகள், விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையால் மனக்குறையுற்றும், அதிருப்தியுற்றும், உயர் நீதிமன்றத்தின் முன்பாக இம்மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளனர்.உயர்

நீதிமன்றமானது, எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் மேற்படி மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்து, விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்தது. மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்தும், அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்தும், உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவால் மனக்குறையுற்றும், அதிருப்தியுற்றும் 1 முதல் 3 வரையிலான அசல் பிரதிவாதிகள் இம்மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளனர்.

4. மேல்முறையீட்டாளர்கள்-அசல் பிரதிவாதிகளின் சார்பாக கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் முன்னிலையானார் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்கள்-அசல் வாதிகள் சார்பாக கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ஜீ. பாலாஜி முன்னிலையானார்.

5. வழக்கின் பொருண்மைகளையும், சூழ்நிலை களையும் கொண்டு, வழக்குச் சொத்துகளில் வாதிகளுக்கு 3/4 பங்கு உரிமையுண்டு என தீர்ப்பாணையிட்டதில், அறிவார்ந்த விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும், பெருந்தவறிழைத்துவிட்டன என 1 முதல் 3 வரையிலான அசல் பிரதிவாதிகளுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் வலிமையாக வாதிட்டுள்ளார்.

5.1.மேலும், மேல்முறையீட்டாளர்கள் -1 முதல் 3 வரையிலான அசல் பிரதிவாதிகள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் வாதிட்டதாவது, வழக்குச் சொத்துகள் 1-ஆம் பிரதிவாதியால் அவருடைய பெற்றோரிடமிருந்து பெற்ற சீதனத்தைக்கொண்டும் மற்றும் அவருடைய தங்க அணிகலன்களை விற்றும் வாங்கப்பட்டது ஆகும். ஒப்புக்கொண்டவகையில், வழக்குச் சொத்துகள் 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்டு, அவர் அவற்றின் சுவாதீனத்தில் இருந்துவந்தார் என்று பணிந்துரைக்கப் பட்டுள்ளது. எனவே, வழக்குச் சொத்துகள் நாராயணசாமி

முதலியாரால் வாங்கப்பட்டன என்னும் காண்முடிவானது தவறாகும் என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

5.2. 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்ட சொத்துகள் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை என்பது அசல் வாதிகளின் தரப்பு வாதமாக வைத்துக்கொண்டாலும், சொத்து நடவடிக்கையானது மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை என்பதை உறுதியான சான்றைக் கொண்டு நிரூபிப்பது வாதிகளின் மீதான பொறுப்பாகும் என மேல்முறையீட்டாளர்கள் -1 முதல் 3 வரையிலான அசல் பிரதிவாதிகளுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் அவர்களால் வாதிடப்பட்டுள்ளது. தற்பொழுதைய வழக்கில், சொத்து நடவடிக்கையானது மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை என நிரூபிக்கும் பொறுப்பை வாதிகள் மெய்ப்பிக்கத் தவறிவிட்டனர் என பணிந்துரைக்கப் பட்டுள்ளது. 1-ஆம் பிரதிவாதியின் பெயரிலான கிரைய ஆவணங்கள்/சொத்து நடவடிக்கைகள் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகளல்ல என நிரூபிக்கும் பொறுப்பை விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் தவறாக பிரதிவாதிகள் மீது சுமத்தியுள்ளன என பணிந்துரைக்கப் பட்டுள்ளது. மேற்சொன்னவை, இந்நீதிமன்றத்தினால் வகுத்துரைக்கப்பட்ட சட்ட விதிகளுக்கு முரணானவை எனவும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

5.3. மேலும், தற்பொழுதைய வழக்கில், இரு ஆவணங்களான அதாவது, சொத்துகளுள் ஒன்றைக் குறிக்கும் கிரைய ஆவணமான பி.சா.ஆ .3-ஐயும், இரு சொத்துகள் தொடர்பான கிரைய ஆவணமான பி.சா.ஆ .4-ஐயும் மட்டும் பரிசீலித்து, கீழமை நீதிமன்றங்கள், மொத்த வழக்குச் சொத்துகளையும் மூதாதையர் சொத்துகள் எனவும் மற்றும்/அல்லது அச்சொத்துகள் மூதாதையர் சொத்துகளை விற்றதன் மூலம் கிடைத்த நிதியைக்கொண்டு வாங்கப்பட்டவை என்றும் கருதின என மேல்முறையீட்டாளர்கள் 1 முதல் 3 வரையிலான அசல் பிரதிவாதிகள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் வாதிட்டார்.

5.4.மேலும், மேல்முறையீட்டாளர்கள்-1 முதல் 3 வரையிலான அசல் பிரதிவாதிகள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் அவர்களால் வாதிடப்பட்டதாவது, பி.சா.ஆ.3 கிரைய ஆவணத்தின் மூலம் சொத்து வாங்கப்பட்ட சமயத்தில், ஏதோவொரு சிறிய தொகை அல்லது பகுதிதொகை அவரது கணவரால் கொடுக்கப்பட்டதாலேயோ மற்றும் பி.சா.ஆ.4 கிரைய ஆவணத்தின் மூலம் சொத்துகள் வாங்கப்பட்டபொழுது, முத்திரைத்தாள்கள் வாங்கப்பட்டதாலேயோ, அச்சொத்துகள் மூதாதையர் சொத்துகளை விற்றதன் மூலம் கிடைத்த நிதி ஆதாரத்தைக் கொண்டு வாங்கப்பட்டதாகவோ அல்லது அவை கூட்டுக் குடும்பத்தின் சார்பாக வாங்கப்பட்டதாகவோ கூறமுடியாது என்பதாகும்.

5.5. மேலும், கீழமை நீதிமன்றங்கள் இரண்டும் வா.சா.ஆ .1-ஆன விடுதலைப் பத்திரத்தை தவறாகப் பொருள் கொண்டதன்வகையில் பெருந்தவறிழைத்துள்ளன என்று மேல்முறையீட்டாளர்கள் -1 முதல் 3 வரையிலான அசல் பிரதிவாதிகளுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் அவர்களால் வாதிடப்பட்டு உள்ளது. நாகபூஷணத்திற்கு ரூ .10,000/-கொடுத்ததன்பேரில், அவர் வா.சா.ஆ. 1-ஆன விடுதலைப் பத்திரத்தை நிறைவேற்றியுள்ளார். அத்தொகையைக் கொடுத்ததன் பேரில் நாகபூஷணம் சொத்தில் அவரது பங்கை விடுவித்ததால், சொத்துகள் நாராயணசாமி முதலியாரின் கூட்டுக் குடும்பச் சொத்துக்களென முடிவு செய்வது உகந்தது என் ற அடிப்படையில், வழக்குச் சொத்துகள் நாராயணசாமி முதலியாரின் கூட்டுக் குடும்பச் சொத்துக்களென தீர்மானித்ததில் கீழமை நீதிமன்றங்கள் இரண்டும் பெருந்தவறிழைத்துள்ளன என பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

5.6.மேலும், மேல்முறையீட்டாளர்கள் -1 முதல் 3 வரையிலான அசல் பிரதிவாதிகளுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் அவர்களால் வாதிடப்பட்டதாவது, பதிவாவணச் சான்றுகள் மிகக் குறிப்பாக, பி.சா.ஆ .3 முதல் 7 வரையிலான ஆவணங்களைப் பரிசீலிக்கையில், 1-ஆம் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்ட சொத்துகள், நாராயணசாமி

முதலியாரின் மூதாதையர் சொத்துகளில் சிலவற்றை விற்கும் முன்னரே வாங்கப்பட்டவை என்று தெரியவருகிறது என்பதாகும். எனவே, வழக்குச் சொத்துகள் நாராயணசாமி முதலியாரின் மூதாதையர் சொத்துகளை விற்ற நிதி ஆதாரத்தில், 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்டவை என்னும் வாதிகளின் தரப்பு வழக்கானது ஏற்புடையதல்ல எனவும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. ஓம் பிரகாஷ் ஷர்மா -எதிர்-ராஜேந்திர பிரசாத் உஜீவ்டா, (2015) 15 எஸ்.சி.சி. 556 என்ற வழக்கில் இந்நீதிமன்றத் தீர்முடிவின் 10-ஆம் பத்தியை சார்ந்து, மேல்முறையீட்டாளர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் அவர்களால் வாதிடப்பட்டதாவது, 1-ஆம் பிரதிவாதியின் சார்பான சொத்து நடவடிக்கைகள்/கிரைய ஆவணங்கள், இந்து வாரிசுரிமை சட்டம் இயற்றப்படுவதற்கு முந்தையவை என்பதாலும், அவ்வப்பொழுது மேற்படி சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுவருவதாலும், நாராயணசாமி முதலியார் தன்னுடைய மனைவியான 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் சொத்துகளை வாங்கியதன் நோக்கமே தன்னுடைய மரணத்திற்குப் பின்னர், தன்னுடைய மனைவிக்கு பாதுகாப்பான வாழ்வையளிக்கும்பொருட்டே எனவும் கூறலாம் என்பதாகும்.

5.7. 1-ஆம் பிரதிவாதியின் சார்பான கிரைய நடவடிக்கைகள், மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகள் என்பதை வாதிகள் உறுதியான சான்றளித்து நிரூபிக்கத் தவறிவிட்டனர் என மற்றவகையிலும் மேல்முறை யீட்டாளர்கள் -1 முதல் 3 வரையிலான அசல் பிரதிவாதிகளுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் அவர்களால் வாதிடப்பட்டது. 1-ஆம் பிரதிவாதியின் சார்பாக உள்ள வழக்குச் சொத்துகளின் கிரைய நடவடிக்கைகள் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகள் என்பது குறித்து, வழக்குரையிலுங்கூட குறிப்பான வாதங்கள் ஏதுமில்லை என்று திரு. வி. பிரபாகர் அவர்களால் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. அறிவார்ந்த விசாரணை நீதிமன்றமுங்கூட மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகள் தொடர்பாக, குறிப்பிட்ட வழக்கெழு வினா எதையும் வனையவில்லை என பணிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், நற்கூறுகளின்

அடிப்படையிலும் மற்றும் பி. லீலாவதி -எதிர்-வி.சங்கர்நாராயண ராவ், (2019) 6 ஸ்கேல் 112 என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்முடிவினை பரிசீலித்ததன் பேரிலும், அதில், ஜெய்தயாள் போத்தர்-எதிர் திருமதி பீபி உறஸ்ரா, (1974) 1 எஸ்.சி.சி. 3; தாக்கூர் பீம் சிங்-எதிர்-தாக்கூர் கான் சிங், (1980) 3 எஸ்.சி.சி. 72; பீனாபானி பால் -எதிர்-பிரதிமா கோஷ், (2007) 6 எஸ்.சி.சி. 100 மற்றும் வள்ளியம்மாள் -எதிர்-சுப்ரமணியம், (2004) 7 எஸ்.சி.சி. 233 என்ற வழக்குகளில் இந்நீதிமன்றத்தின் முந்தைய தீர்முடிவுகளைப் பரிசீலித்தப் பின்னர், 1-ஆம் பிரதிவாதிக்காதரவாக நிறைவேற்றப்பட்ட கிரைய ஆவணங்கள் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகள் என சொல்லமுடியாது என மற்றவகையிலும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

5.8. மேற்படி வாதங்களை வைத்தும், மேற்படி தீர்முடிவுகளைச் சார்ந்தும், தற்பொழுதைய மேல்முறையீட்டை அனுமதிக்குமாறு வேண்டப்பட்டது.

6. எதிர்மேல்முறையீட்டாளர்கள்-அசல் வாதிகள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ஜீ. பாலாஜி அவர்களால் தற்பொழுதைய மேல்முறையீடு கடுமையாக எதிர்க்கப்பட்டது.

6.1. எதிர்மேல்முறையீட்டாளர்கள்-அசல் வாதிகளின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ஜீ. பாலாஜி அவர்களால் வலிமையாக வாதிடப்பட்ட தாவது, கோப்பிலுள்ள ஒட்டுமொத்த சான்றுகளையும் மதிப்பிட்டதன்பேரில், மூதாதையர் சொத்துகளை விற்று கிடைத்த நிதி ஆதாரத்தை கொண்டே, நாராயணசாமி முதலியாரால் மேற்படி சொத்துகள் 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்டதால், 1-ஆம் பிரதிவாதியின் சார்பான கிரைய நடவடிக்கைகள் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகளாகும் என அறிவார்ந்த விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் சரியாகவே முடிவு செய்துள்ளன என்பதாகும். பி.சா.ஆ .3, பி.சா.ஆ .4 மேலும் பி. சா.ஆ .1-ஐயும் பரிசீலித்து, 1-ஆம் பிரதிவாதியின் சார்பான கிரைய ஆவணங்கள்/நடவடிக்கைகள் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகள் என்றும், ஆகவே, நாராயணசாமி முதலியாரால்

மூதாதையர் சொத்துகளை விற்று கிடைத்த நிதி ஆதாரத்தைக் கொண்டே வழக்குச் சொத்துகள் வாங்கப்பட்டன என்றாலும், 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்ட சொத்துகளில் வாதிகள் 3/4 பங்கு பெற உரிமையுடையவர்கள் என்றும் உயர் நீதிமன்றம் சரியாகவே கருத்து தெரிவித்து தீர்ப்பளித்துள்ளது என பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

6.2. மேலும், எதிர்மேல்முறையீட்டாளர்கள்-அசல் வாதிகளுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஜீ. பாலாஜியால் வாதிடப்பட்டதாவது, கிரைய நடவடிக்கைகள் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகள் என்பதை நிரூபிக்க (மேற்கண்ட) பி. லீலாவதி என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தினால் வகுக்கப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் தற்பொழுதைய வழக்கில் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதாகும்.

6.3. தற்பொழுதைய வழக்கில், சொத்துகள் 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் இருந்தபொழுதிலும், அவை வாங்கப்பட்டு கூட்டுக் குடும்பச் சொத்துகளாகவே அனுபவிக்கப்பட்டு வந்தன என்பது தரப்பினர்களின் நோக்கம் மற்றும் நடத்தைகளிலிருந்துங்கூட நிரூபிக்கப்பட்டுள்ளன என்று எதிர்மேல்முறையீட்டாளர்கள்-அசல் வாதிகளுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ஜீ. பாலாஜி அவர்களால் வாதிடப்பட்டுள்ளது. மற்றபடி, மகள் நாகபூஷணத்திற்கு பங்கில்லையெனில், அவர் தன் பங்கினை 1-ஆம் பிரதிவாதி சார்பாக விட்டுகொடுத்திருக்கமாட்டார் என பணிந்துரைக்கப்பட்டுள்ளது. 1-ஆம் பிரதிவாதிக்காதரவாக நாகபூஷணத்தால் விடுதலைப் பத்திரம் நிறைவேற்றப்பட்டது என்றால், அது, 1-ஆம் பிரதிவாதி வழக்குச் சொத்துகளை கூட்டுக் குடும்பச் சொத்துகளாக கருதியதன் மூலம், மகள் நாகபூஷணத்தின் பங்கையும் கருத்திற்கொண்டார் என்பதைத் தெரிவிக்கிறது என பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

6.4. மேலும், எதிர்மேல்முறையீட்டாளர்கள்-அசல் வாதிகளுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ஜீ. பாலாஜி அவர்களால் பணிந்துரைக்கப்பட்டுள்ளதாவது, 1-ஆம் பிரதிவாதியால்

நிறைவேற்றப்பட்டதான 11.02.1987-ஆம் தேதியிடப்பட்ட உயிலானது, நாராயணசாமி முதலியாருக்கு மட்டுமே சொந்தமான சொத்துகளையும் உள்ளடக்கியுள்ளது என்பதாகும்.வழக்குச் சொத்துகள் கூட்டுக் குடும்பச் சொத்துகள் என்பதும், ஆகவே, அவை பாகப்பிரிவினைக்கு உரியவை என்பதும், 1-ஆம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துகளல்ல என்பதும் பி.சா.ஆ .8 மற்றும் பி.சா.ஆ .9-லிருந்து அறியப்படுகிறது என்று வாதிடப்பட்டுள்ளது.

6.5. மேலும், எதிர்மேல்முறையீட்டாளர்கள்-அசல் வாதிகளுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஜீ பாலாஜி அவர்களால் வலிமையாக வாதிடப்பட்டதாவது, வழக்குச் சொத்துகள் நாராயணசாமி முதலியாரின் ஆயுட்காலத்தின்பொழுது வாங்கப்பட்டவையாகும். 1-ஆம் அசல் பிரதிவாதிக்கு தனிப்பட்ட வருவாய் ஏதுமில்லை என பணிந்துரைக்கப்பட்டுள்ளது.நாராயணசாமி முதலியாருக்கு வருவாய் தரக்கூடிய மூதாதையர் சொத்துகளும், விவசாய நிலங்களும் இருந்தன என்றும், அவர் மூதாதையர் சொத்துகளிலிருந்து கிடைத்துவந்த வருவாயிலிருந்தும், ஒரு சில மூதாதையர் சொத்துகளை விற்றும், தனது மனைவியான 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் அனைத்து சொத்துகளையும் வாங்கினார் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

6.6. மேலும், எதிர்மேல்முறையீட்டாளர்கள்-அசல் வாதிகளுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஜீ. பாலாஜி அவர்களால் வலிமையாக வாதிடப் பட்டதாவது, 1988-ஆம் ஆண்டு மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைச் சட்டப்பிரிவு 3 (2) -இன் கீழான மறுக்கத்தக்க அனுமானமானது, 2016-ஆம் ஆண்டு மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகள் திருத்தச் சட்டத்தின் மூலம் அகற்றப்பட்டுவிட்டது என்பதாகும். நாளது தேதியில் மனைவி அல்லது குழந்தைகள் பெயரில் வாங்கப்படும் சொத்தானது அவர்களுடைய நலனுக்கேயாகும் என்பதான சட்ட அனுமானம் ஏதுமில்லை.

6.7. மேற்படி வாதங்களை வைத்தும், மேற்படி தீர்முடிவுகளைச் சார்ந்தும் தற்பொழுதைய மேல்முறையீட்டை தள்ளுபடிசெய்ய வேண்டப்படுகிறது.

7. அந்தந்த தரப்பினர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்கள் விரிவாகக் கேட்கப்பட்டன. அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தினாலும், உயர் நீதிமன்றத்தினாலும் பதிவு செய்யப்பட்ட காண்முடிவுகளை நாங்கள் விரிவாக ஆராய்ந்து அவற்றைப் பரிசீலித்துள்ளோம். நாங்கள், வாய்மொழி மற்றும் ஆவணச்சான்றுகளையுங்கூட விரிவாகப் பரிசீலித்துள்ளோம்.

7.1. வழக்குச் சொத்துகள் மூதாதையர் சொத்துகள் என்றும், நாராயணசாமி முதலியார், தன்னுடைய மூதாதையரின் மூலாதாரச் சொத்திலிருந்து பெற்ற சொத்தில் தன்னுடைய பங்கை வேறு நபர்களுக்கு விற்றதன் மூலம் கிடைத்த நிதியிலிருந்து தன்னுடைய மனைவியான 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வழக்குச் சொத்துகளை வாங்கியுள்ளார் என்றும், வழக்குச் சொத்துகளை வாங்கிய நாள் முதற்கொண்டு, அவை கூட்டு குடும்பத்தின் முழுமையான சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்துவருகின்றன என்றும் வாதுரைத்து, வழக்கு சொத்துகளின் பாகப்பிரிவினைக்காகவும், 3/4 பங்கு சொத்தை கோரியும் அசல் வாதிகள் உரிமை வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர் என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிடவேண்டியதாகிறது.1-ஆம் பிரதிவாதியின் சார்பான கிரைய ஆவணங்கள்/நடவடிக்கைகள், மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகளாகும் என்று வாதிகளால் திட்டவட்டமாக வாதிடப்படவில்லை என்பது வாதுரைகளிலிருந்து புலப்படுகிறது. மூதாதையர் சொத்துகளிலிருந்து பெறப்பட்ட வருவாயிலிருந்தே நாராயணசாமி முதலியாரால் தன்னுடைய மனைவியான 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வழக்குச் சொத்துகள் வாங்கப்பட்டன என்பதுங்கூட வாதுரைக்கப்படவில்லை. 1-ஆம் பிரதிவாதியின் சார்பான கிரைய நடவடிக்கைகள்/ஆவணங்கள் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகளா, இல்லையா? என அறிவார்ந்த விசாரணை நீதிமன்றமுங்கூட திட்டவட்டமாக வழக்கெழுவினாவை வனையவில்லை. மேற்படியானவற்றிலிருந்தும், அறிவார்ந்த விசாரணை நீதிமன்றமும், உயர்

நீதிமன்றமும் 1-ஆம் பிரதிவாதியின் பெயரிலுள்ள சொத்து நடவடிக்கைகளும்/கிரைய ஆவணங்களும் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகள் என தீர்மானித்துள்ளன. விசாரணை நீதிமன்றத்தினால் பதிவு செய்யப்பட்ட மேற்சொன்ன காண்முடிவுகள் உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது மற்றும் அதனைத் தொடர்ந்து வாதிகளுக்கு ஆதரவாக வழங்கப்பட்ட பாகப்பிரிவினை பரிகாரந்தான் தற்பொழுதைய மேல்முறையீட்டின் விடயப் பொருளாகும்.

8. தற்பொழுதைய மேல்முறையீட்டில் சம்பந்தப்பட்ட பிரச்சினையை, அதாவது, 1-ஆம் பிரதிவாதி சார்பான சொத்து நடவடிக்கைகள்/கிரைய ஆவணங்கள் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகளா, இல்லையா?என்பதைப் பரிசீலிக்கையில், மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகளின்பேரிலான சட்டமானது பரிசீலிக்கப்பட வேண்டியதாகிறது மற்றும் மேற்சொன்னவற்றின்பேரில் இந்நீதிமன்றத்தின் சில தீர்முடிவுகளும் குறிப்பிடப்பட வேண்டியுள்ளன.

8.1. (மேற்படி) ஜெய்தயாள் போத்தார் என்ற வழக்கில், ஒரு குறிப்பிட்ட கிரையமானது, மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை என்றும், வெளிப்படையாக சொத்து வாங்குபவர் உண்மையான உரிமையாளரல்ல என்று உறுதியாக கூறும் நபர் மீதே அதனை நிரூபிக்கும் பொறுப்பானது எப்பொழுதும் உள்ளது என்றும் இந்நீதிமன்றம் குறிப்பாகக் கருத்து தெரிவித்து தீர்ப்பளித்துள்ளது. மேலும், இப்பொறுப்பானது, மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகள் என்ற பொருண்மையை நேரடியாக நிரூபிக்கவோ அல்லது அப்பொருண்மையின் அனுமானத்தை தவறுக்கிடமின்றியும், நியாயமாகவும் எழுப்பும் சூழ்நிலைகளை நிறுவவோ, உறுதிவாய்ந்த சட்டப்பூர்வமான சான்றளிப்பதன் மூலம் கண்டிப்பாக நிறைவேற்றப்படவேண்டும் என கருத்துரைக்கப்பட்டுள்ளது.மேற்படி தீர்முடிவின் பத்தி 6-இல் இந்நீதிமன்றமானது, கீழ்க்காணுமாறு கருத்து தெரிவித்து தீர்ப்பளித்துள்ளது:

" 6. குறிப்பிட்ட கிரையமானது, மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை என்றும், வெளிப்படையாக சொத்து வாங்குபவர் அதன் உண்மையான உரிமையாளரல்ல என்றும் உறுதியாக கூறும் நபர் மீதே, அதனை நிரூபிக்கும் பொறுப்பானது எப்பொழுதும் உள்ளது என்பதும், இப்பொறுப்பானது, மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை என்ற பொருண்மையை நேரடியாக நிரூபிக்கவோ அல்லது அப்பொருண்மையின் அனுமானத்தை தவறுக்கிடமின்றியும், நியாயமாகவும் எழுப்பும் சூழ்நிலைகளை நிறுவவோ உறுதிவாய்ந்த, சட்டப்பூர்வமான சான்றளிப்பதன் மூலம் கண்டிப்பாக நிறைவேற்றப்படவேண்டும் என்பதும் நன்கு அறுதியிடப்பட்டுள்ளது. மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கையின் சாராம்சமே, தரப்பினர் அல்லது தரப்பினர்களின் உள்நோக்கம் சம்பந்தப்பட்டதாகும். அந்த உள்நோக்கமானது, எப்பொழுதுமே எளிதில் ஊடுருவமுடியாதவாறு அடர்த்தியான முக்காட்டால் முடி மறைக்கப் பட்டுள்ளது. ஆனால், ஒரு நடவடிக்கையை மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கையென உறுதியாகக் கூறும் நபர் மீதான கடுமையான பொறுப்பிலிருந்து அந்நபரை அத்தகைய சிரமங்கள் விடுவிக்காது என்பதோடு, நிருபணத்திற்கு மாற்றாக கற்பனையையோ அல்லது அனுமானங்களையோ ஏற்பதை நியாயப்படுத்தாது.காரணம்யாதெனில், ஓர் ஆவணம் என்பது ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்னரே, உருவாக்கப்பட்டு, நிறைவேற்றப்படும் உறுதி ஆவணமாகும் மற்றும் ஆவணத்தில் சொத்தை வாங்குபவராகவோ அல்லது உரிமை மாற்றம் பெற்றவராகவோ வெளிப்படையாகக் குறிப்பிடப்படும் நபர், வெளிப்படையான நிலவரங்களே உண்மையான நிலவரங்களாகும் என்று தனக்காதரவான ஆரம்பநிலை அனுமானத்துடனேயே செயல்படத் தொடங்குகிறார். ஒரு குறிப்பிட்ட கிரையமானது, மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கையா, இல்லையா? என்னும்

வினாவானது பெருமளவிலான பொருண்மைகளில் ஒன்றாக உள்ளபொழுதிலும், இவ்வினாவைத் தீர்மானிப்பதற்கு அனைத்து சூழ்நிலைகளுக்கும் ஒரே சீராகப் பொருந்தக்கூடிய முழுமையான சூத்திரங்களையோ அல்லது கடுமையான ஆய்வுகளையோ வகுக்கமுடியாது. இன்னமும், சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதிலும், தொடர்புடைய குறிப்புகளைக் சேகரிப்பதிலும் நீதிமன்றங்கள் வழக்கமான இச்சூழ்நிலைகளால் வழிகாட்டப் படுகின்றன: (1) சொத்தை வாங்குவதற்கான பணமானது, எந்த ஆதாரத்திலிருந்து வந்தது; (2) சொத்து வாங்கப்பட்ட பின்னர் அதன் தன்மையும், சுவாதீனமும்; (3) நடவடிக்கைக்கு மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை எனும் சாயம்பூசும் உட்கருத்து ஏதுமிருப்பின் அந்த உட்கருத்து; (4) தரப்பினர்களின் நிலைப்பாடு மற்றும் உரிமை கோருபவருக்கும், மாற்றாளாக செயல்படுபவராக சொல்லப்பட்டவருக்குமிடையிலான உறவுமுறை; (5) கிரையத்திற்குப் பின்னர் உரிமைமூல ஆவணங்களின் பாதுகாப்பு; (6) கிரையத்திற்குப் பின்னர் சொத்தைக் கையாளுவதில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் நடத்தை.

(மேற்படி) தாக்கூர் பீம் சிங் என்ற வழக்கில் இந்நீதிமன்றமானது, பத்தி 18-இல் கீழ்க்காணுமாறு கருத்து தெரிவித்து தீர்ப்பளித்தது:

"18. ஓர் உரிமைமாற்றம், மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கையா, இல்லையா? என்னும் வினாவைத் தீர்மானிப்பதற்குட்பட்டிருக்கும் கோட்பாடானது, இவ்வாறாக தொகுத்தளிக்கப் படுகிறது. (1) ஓர் உரிமைமாற்றமானது, மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கையே என எவர் உறுதியாக கூறுகிறாரோ, அவர் மீதே அதனை நிரூபிக்கும் பொறுப்புள்ளது; (2) சொத்து எவருக்கு ஆதரவாக உரிமைமாற்றம் செய்யப்பட்டுள்ளதோ, அந்த நபரல்லாமல் வேறு நபரிடமிருந்து சொத்து வாங்கப்படுவதற்கான பணம் வந்தது என்பதை நிரூபிக்கவேண்டும்.

வாங்குவதற்கான பணம் அளித்த நபரின் நலனுக்காகவே சொத்து வாங்கப்பட்டுள்ளதாக முதல் நோக்கிலேயே அனுமானிக்கப்பட வேண்டும்; (3) இதற்கு மாறான சான்று இருந்தாலன்றி, நடவடிக்கையின் உண்மையான தன்மையானது சொத்து வாங்க பண உதவி செய்த நபரின் உள்நோக்கத்திற்குட்பட்டது மற்றும் (4) அவருடைய நோக்கம் என்னவாக இருந்தது என்பது குறித்த வினாவானது சுற்றுப்புற சூழல்கள், தரப்பினர்களின் உறவுமுறை, நடவடிக்கையை நிறைவேற்றுவதில் அவர்களது செயற்பாட்டை உள்ளடக்கும் உட்கருத்து மற்றும் அவர்களுடைய பிந்தைய நடத்தை போன்றவற்றின் அடிப்படையிலேயே முடிவு செய்யவேண்டியுள்ளது. '"

8.2. (மேற்படி) பி. லீலாவதி என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்க்காணுமாறு தீர்ப்பளித்துள்ளது:

" 9.2. (மேற்படி) பீனாபானி பால் என்ற வழக்கில், மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகளின் தன்மையைப் பரிசீலிக்க, இந்நீதிமன்றத்திற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.அக்கருத்தின் மீது இந்நீதிமன்றத்தின் தொடர்ச்சியான தீர்முடிவுகளைப் பரிசீலித்த பின்னர், அத்தீர்ப்புரையில், நிதி ஆதாரம் ஒன்றே, ஒருபோதும் தனிப்பட்ட பரிசீலனைக்குரியதாயிருந்ததில்லை. அது, தொடர்புடைய பரிசீலனைகளுள் ஒன்று என்பது மட்டுமின்றி, அது தீர்மானிக்கும் தன்மையுடையதல்ல என இந்நீதிமன்றம் கருத்து தெரிவித்து தீர்ப்பளித்துள்ளது. வள்ளியம்மாள் -எதிர்-சுப்ரமணியம், (2004) 7 எஸ்.சி.சி. 233 என்ற இந்நீதிமன்றத்தின் முந்தைய வழக்கின் தீர்ப்பைப் பரிசீலித்தும், ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையானது மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை என்ற தன்மையில் உள்ளதா? என்பதைப் பரிசீலித்தும், பின்வரும் ஆறு சூழ்நிலைகளை வழிகாட்டியாக எடுத்துக்கொண்டு, இந்நீதிமன்றம் இறுதியாக முடிவு செய்ததாவது:

" (1) சொத்து வாங்குவதற்கான பணமானது, எந்த ஆதாரத்திலிருந்து வந்தது ?;

(2) சொத்து வாங்கிய பிறகு அதன் தன்மையும், சுவாதீனமும்;

(3) நடவடிக்கைக்கு மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை எனும் சாயம்பூசும் உட்கருத்து ஏதுமிருப்பின் அந்த உட்கருத்து,

(4) தரப்பினர்களின் நிலைப்பாடு மற்றும் உரிமை கோருபவருக்கும், மாற்றாளாக செயல்படுபவராக சொல்லப்பட்டவருக்குமிடையிலான உறவுமுறை;

(5) கிரையத்திற்குப் பின்னர் உரிமைமூல ஆவணங்களின் பாதுகாப்பு; மற்றும்

(6) கிரையத்திற்குப் பின்னர் சொத்தைக் கையாளுவதில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் நடத்தை.((மேற்படி) ஜெய்தயாள் போத்தார் -எதிர்-பீ.பி.உறஸ்ரா எஸ். சி.சி. பக்கம் 7, பத்தி 6) ".

8.3. (மேற்படி) பி. லீலாவதி வழக்கில் இந்த நீதிமன்றத்தின் அண்மை தீர்ப்பில் மேற்சொன்ன தீர்முடிவைப் பரிசீலித்தப் பின்னர், ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையானது மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை தன்மையிலுள்ளது என முடிவு செய்ய, மேற்படி ஆறு சூழ்நிலைகளை வழிகாட்டியாக கொள்ளவேண்டும் என இந்நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

8.4. மேற்சொன்ன தீர்முடிவுகளில் இந்த நீதிமன்றத்தினால் வகுக்கப்பட்ட சட்டத்தையும், விசாரணை நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட காரண விளக்கமானது உயர் நீதிமன்றத்தினால் உறுதி செய்யப்பட்டதையும், கையிலுள்ள வழக்கிற்குப் பொருத்திப்பார்க்கையில், கிரைய நடவடிக்கைகள் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகளல்ல என நிரூபிக்கும் பொறுப்பை, பிரதிவாதிகள் மீது மாற்றியமைத்ததில், அறிவார்ந்த விசாரணை

நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் பிழைபுரிந்துள்ளதாகத் தோன்றுகிறது. இதில் இதற்கு மேலே தீர்ப்பளித்ததுபோன்று, உண்மையில் 1-ஆம் பிரதிவாதியின் பெயரிலுள்ள வழக்குச் சொத்துகள் தொடர்பான கிரைய ஆவணங்கள் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கையே என வழக்குரையில் குறிப்பாக கோராதபொழுதிலும், வாதிகள் அதனை கோரும் பொழுது, நாராயணசாமி முதலியார், தன்னுடைய மனைவியான 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வழக்குச் சொத்துகளை வாங்குவதற்கான நோக்கத்தை உறுதியான சான்றளித்து நிரூபிக்கத் தவறிவிட்டனர்.

9. 1-ஆம் பிரதிவாதிக்கு ஆதரவான கிரைய ஆவணங்கள்/நடவடிக்கைகள் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை என முடிவு செய்கையில், விசாரணை நீதிமன்றத்தினால் பதிவு செய்யப்பட்ட காரணவிளக்கமும், காண்முடிவுகளும் உயர் நீதிமன்றத்தினால் உறுதி செய்யப் பட்டிருந்தாலுங்கூட, அவை பொருந்தக்கூடியதாகவோ மற்றும்/அல்லது இந்நீதிமன்றத்தினால் மேற்படி தீர்ப்புரைகளில் குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளுக்கு பொருந்துவதாகவோ கூறப்படமுடியாது.

9.1. வழக்குச் சொத்துகளை மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகள் என தீர்ப்பளிக்கையில், அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட முதல் காரணம்யாதெனில், சொத்து வாங்கும் சமயத்தில் நாராயணசாமி முதலியாரால் பகுதி கிரையத் தொகை கிரைய ஆவணம் பி.சா.ஆ .3 மூலம் கொடுக்கப்பட்டது என்பதாகும். இதில் இதற்குமேலே குறிப்பிடப்பட்ட தொடர் முடிவுகளில் இந்நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டதுபோன்று, பகுதி கிரையத் தொகை அளித்ததையே, கிரையம்/நடவடிக்கையானது மாற்றாள் (பினாமி) பெயரிலானது என முடிவு செய்வதற்கான ஒரே அடிப்படை விதியாகக் கூறமுடியாது. ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையை, மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கையாகப் பரிசீலிக்கையில், சொத்து வாங்குவதற்கு பண உதவியளித்த நபரின் உள்நோக்கமே நடவடிக்கையின் தன்மையை தீர்மானிக்கும் கூறாகும்.சொத்து வாங்குவதற்கு பண உதவியளித்த நபரின் நோக்கத்தை, சுற்றுப்புறச் சூழல்கள்,

தரப்பினர்களின் உறவுமுறை, நடவடிக்கையைக் கொண்டு வருவதில் அவர்களுடைய செயல்பாடுகளை உள்ளடக்கும் உட்கருத்துகள் மற்றும் அவர்களுடைய பிந்தைய நடத்தை போன்றவற்றிலிருந்து முடிவு செய்யவேண்டியுள்ளது. பி.சா.ஆ .3-இல் உள்ள சொத்தை வாங்கியதன் மூலம் பகுதி கிரையத் தொகை அளித்த நாராயணசாமி முதலியார் கணவரென்ற முறையிலேயே பண உதவி செய்திருக்கவேண்டும், ஆகவே, பகுதி கிரையத் தொகையை பங்களித்ததாலேயே 1-ஆம் பிரதிவாதிக்காதரவான கிரைய ஆவணம், மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை என்றோ, கூட்டு குடும்பத்தின் சார்பிலானது என்றோ முடிவுக்கு வரமுடியாது. ஆகவே, விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் வழக்குச் சொத்துகளை பி.சா.ஆ .3-ஆன ஆவணத்தின் அடிப்படையில் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைகள்/மூதாதையர் சொத்துகளென தீர்மானித்ததில் பெரும் பிழைபுரிந்துள்ளன.

9.2. அதுபோன்றே, பி.சா.ஆ .4 கிரைய ஆவணத்தை நிறைவேற்றிய சமயத்தில், அதற்கான முத்திரைத் தீர்வை நாராயணசாமி முதலியாரால் வாங்கப்பட்ட காரணத்தினாலேயே, 1-ஆம் பிரதிவாதியின் பெயரிலான பி.சா.ஆ .4-ஆன கிரைய ஆவணம் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை எனக் கூறப்படமுடியாது. மேற்கூறப்பட்ட பி.சா.ஆ .3 மற்றும் பி.சா.ஆ .4 என்ற இரு ஆவணங்களைத் தவிர, 1-ஆம் பிரதிவாதியின் சார்பான ஆவணச்சான்று/நடவடிக்கை/கிரைய ஆவணம் எதுவும் அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தினாலும், மேலும், உயர் நீதிமன்றத்தினாலுங்கூட பரிசீலிக்கப்பட்டிருக்க வில்லை என்பது குறிப்பிடப்படவேண்டியுள்ளது.

9.3. தற்பொழுது, ரூ .10,000/-ஐ கொடுத்ததன்பேரில், நாகபூஷணத்தால், 1-ஆம் பிரதிவாதிக்காதரவாக நிறைவேற்றப்பட்ட வா.சா.ஆ .1-ஆன விடுதலைப் பத்திரத்தைப் பரிசீலித்து, விசாரணை நீதிமன்றத்தாலும், உயர் நீதிமன்றத்தாலும் பதிவு செய்யப்பட்ட காண்முடிவுகளைப் பொறுத்தவரையிலும், அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தினாலும் மற்றும் உயர் நீதிமன்றத்தினாலும் எடுக்கப்பட்ட முடிவைப் பொறுத்தவரையிலும், 1-

ஆம் பிரதிவாதியுங்கூட மகளின் பங்கைக் கருத்திற்கொண்டு, வழக்குச் சொத்துகளை கூட்டுக் குடும்பச் சொத்துகளாக கருதினார் என்பதும், ஆகவே, வாதிகளும் வழக்குச் சொத்துகளில் பங்குபெற உரிமையுடையவர்கள் என்பதை பொறுத்தவரையிலும், மேற்படி காண்முடிவானது ஆவணச் சான்றை தவறாக வழிநடத்துவதோடு, அவற்றிற்கு தவறான பொருள் விளக்கமளிக்கிறது என்பதாகும். 1-ஆம் பிரதிவாதி தன்னுடைய சாட்சியத்தில் மகளான நாகபூஷணத்திற்கு ரூ .10,000/-கொடுத்ததையும், அதற்கு நாகபூஷணத்தால் விடுதலைப் பத்திரம் நிறைவேற்றப்பட்டதையும் விளக்கியுள்ளார். அவருக்கு சொத்தில் எந்தப் பங்குமில்லாத பொழுதிலும், எதிர்காலத்தில் சட்டப்பிரச்சனை எதையும் தவிர்க்கும் பொருட்டும் மற்றும் பாதுகாப்பு கருதியும் ரூ .10,000/-ஐ கொடுத்து நாகபூஷணத்தால் 1-ஆம் பிரதிவாதிக்காதரவாக விடுதலைப் பத்திரம் நிறைவேற்றச் செய்தார் என அவரால் குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ .1-ஆன விடுதலைப் பத்திரத்திலுங்கூட அவ்வாறு குறிப்பாக கூறப்பட்டுள்ளது. ஆகவே, நாகபூஷணம் வழக்குச் சொத்துகளில் பங்கேதும் கொண்டிராதபோதும், எதிர்காலத்தில் சட்டப்பிரச்சனை எதையும் தவிர்க்கும் பொருட்டும், ரூ .10,000/-கொடுக்கப்பட்டு, 1-ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக விடுதலைப் பத்திரம் நிறைவேற்றப்பட்டதாலேயே, 1-ஆம் பிரதிவாதி வழக்குச் சொத்துகளை மூதாதையர் சொத்துகளாகவோ மற்றும்/அல்லது கூட்டுக் குடும்பச் சொத்துகளாகவோ பாவித்ததாகவோ கூறப்படமுடியாது.

9.4. 1-ஆம் பிரதிவாதியால் 11.02.1987-ஆம் தேதியிடப்பட்ட உயிலானது நிறைவேற்றப்பட்டு, பின்னர் அவ்வுயில் திரும்பப் பெறப்பட்டுவிட்டதைக் கருத்தில் கொண்டும், 1-ஆம் பிரதிவாதியின் கூற்றுப்படியும், வழக்குச் சொத்துகள், அவருடைய சீதனத்திலிருந்தும், தங்க, அணிகலன்களை விற்றும் வாங்கப்பட்டதால், அவற்றை எப்பொழுதுமே சுய சம்பாத்தியச் சொத்தாகவே கருதிவந்தார் என்ற பொருண்மையைத் தெரிவிக்கிறது.

10. நாராயணசாமி முதலியாரால் பெறப்பட்ட மூதாதையர் சொத்துகளை விற்றதன்மூலம் கிடைத்த வருவாயைக்கொண்டு, வழக்குச் சொத்துகளை 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வாங்கினார் என்ற விவரத்துடனேயே வாதிகள்

வழக்குரையுடன் வந்துள்ளனர் என்பதைக் குறிப்பிடவேண்டியுள்ளது. மூதாதையர் சொத்துகளிலிருந்து கிடைத்த வருவாயைக்கொண்டே, வழக்குச் சொத்துகள், நாராயணசாமி முதலியாரால் 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்டன என்பது வாதிகள் தரப்பு வழக்குரையல்ல. எனினும், நாராயணசாமி முதலியாரால் விற்கப்பட்ட வழக்குச் சொத்துகள் மற்றும் மூதாதையர் சொத்துகள் தொடர்பான நடவடிக்கைகள் நடந்த தேதியைப் பரிசீலித்ததில், 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்ட வழக்குச் சொத்துகள் அனைத்தும், நாராயணசாமி முதலியாரால் மூதாதையர் சொத்துகள் விற்கப்படுவதற்கு மிகவும் முந்தையவை என்பது தெரியவருகிறது. மூதாதையர் சொத்தானது (வா.சா.ஆ .3) நாராயணசாமி முதலியாரால் 11.11.1951-ஆம் தேதியன்று விற்கப்பட்டுள்ளது. ஆயினும், வழக்குச் சொத்துக்களோ பி.சா.ஆ .3, பி.சா.ஆ .4, பி.சா.ஆ .5, பி.சா.ஆ .6 மற்றும் பி. சா. ஆ. .7 ஆகிய கிரைய ஆவணங்கள், வா.சா.ஆ .3-ஆன சொத்து விற்பனைக்கு மிகவும் முன்பேயானவையாகும். ஆகவே, நாராயணசாமி முதலியாரால் மூதாதையர் சொத்துகள் விற்றுகிடைத்த நிதியைக்கொண்டே, வழக்குச் சொத்துகள் 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்டதாகவும் கூறப்படமுடியாது.

11. (மேற்படி) ஓம் பிரகாஷ் ஷர்மா என்ற வழக்கில் 10-ஆம் பத்தியில் இந்நீதிமன்றத்தினால் தெரிவிக்கப்பட்ட கருத்துரைகளைப் பரிசீலித்து, நாராயணசாமி முதலியார் தனக்கு மரணம் நிகழ்கையில் தன்னுடைய மனைவிக்கு பாதுகாப்பான வாழ்க்கையை அளிக்கும்பொருட்டே, அவர் வழக்கு சொத்துகளை 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வாங்கியிருக்கக்கூடும் எனவும் கூறலாம். 1-ஆம் பிரதி வாதியின் சீதனத்தைக்கொண்டும், தங்க அணிகலன்களை விற்றும் அவரால் வழக்குச் சொத்துகள் வாங்கப்பட்டன என்பது 1-ஆம் பிரதிவாதியின் குறிப்பான வழக்குரையாகும் என்பதைக் குறிப்பிடவேண்டியுள்ளது.

12. மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை 2016-ஆம் ஆண்டு திருத்தப்பட்டது என்பது குறிப்பிடப்படவேண்டியுள்ளது. 1988-ஆம் ஆண்டு மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை (தடுப்பு) சட்டத்தின்

பிரிவு 3-இன்படி மனைவி மற்றும் குழந்தைகளின் பெயரிலான சொத்து நடவடிக்கையானது அவர்களின் நலனுக்கானது என்னும் அனுமானம் இருந்துவந்தது. 1988-ஆம் ஆண்டு மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கைச் சட்டப்பிரிவு 3 (2) -ஆன மறுதலிக்கத்தக்கதாக இருந்துவந்த இந்த சட்ட அனுமானமானது, 2016-ஆம் ஆண்டு மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை திருத்தச் சட்டத்தின்படி நீக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை சட்டத்தின் பிரிவு 3 (2) நீக்கப்பட்டதைக் கருத்திற்கொண்டு, சட்டப்படியான சொத்து நடவடிக்கை அதாவது, மனைவி அல்லது குழந்தைகள் பெயரில் வாங்கப்படுவது அவர்களின் நலனுக்கே என்னும் வாதமானது தற்பொழுதைய வழக்கிற்கு ஏற்புடையதல்ல என்பது எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வைக்கப்படும் வாதமாகும். மேற்படி வாதமானது ஏற்கப்பட முடியாது. (மேற்கண்ட) பீனாபானி பால் என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்டதுபோன்று, மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கை (தடுப்பு) சட்டமானது முற்கால நடவடிக்கைகளுக்கும் பொருந்தாது. மற்றபடியும், இதில் இதற்கு மேலே கருத்து தெரிவிக்கப் பட்டதுபோன்று, 1-ஆம் பிரதிவாதியின் சார்பான கிரைய ஆவணங்கள், மாற்றாள் பெயரிலான சொத்து நடவடிக்கையே என்பதையும், அச்சொத்துகள் நாராயணசாமி முதலியாரால் பிற மூதாதையர் சொத்துகளை விற்றதன் மூலம் கிடைத்த தொகையிலிருந்து 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்டவை என்பதையும் நிரூபிக்கும் பொறுப்பை வாதி நிறைவேற்றுவதற்கு வருத்தத்திற்குரிய வகையில் தவறிவிட்டார்.

12.1. 1-ஆம் பிரதிவாதியின் சார்பான கிரைய ஆவணங்கள் மாற்றாள் பெயரிலான சொத்து (பினாமி) நடவடிக்கையல்ல என்றும், அந்நேர்வில் 1 மற்றும் 3-ஆம் சொத்துகளைத் தவிர, 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் அவை வாங்கப்பட்டன என்றும், அவருடைய சுய சம்பாத்திய சொத்துகளாக அவற்றை கூறலாம் என்றும், ஆகவே, அவற்றை கூட்டுக் குடும்பச் சொத்துகள் என கூறப்படமுடியாது என்றும் தீர்மானிக்கப்பட்டுவிட்டால், வழக்குச் சொத்துகளில்

(1 மற்றும் 3-ஆம் சொத்துகளைத் தவிர) வாதிகள் பங்கு ஏதும் பெறமாட்டார்கள் எனக் கூறமுடியாது. இக்கட்டத்தில் 1-ஆம் பிரதிவாதிக்காதரவாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், வழக்குச் சொத்துகளில் 1 மற்றும் 3-ஆம் இன சொத்துகள், மூதாதையர் சொத்துகள் எனக் கூறலாம் என்பதை ஒப்புக்கொண்டார், அவரது கூற்றின்படி, வழக்குச் சொத்துகளில் 1 மற்றும் 3-ஆம் இன சொத்துகள், மூதாதையர் சொத்துகளே என்பதும், உயர் நீதிமன்றத்தின் முன்பாகவும், 1-ஆம் பிரதிவாதியின் சார்பாக வைக்கப்பட்ட வாதமாகும் என திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

13. மேற்படியானவற்றையும், மேற்கூறப்பட்ட காரணங்களையும் கருத்திற்கொண்டு, தற்பொழுதைய மேல்முறையீடானது பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. வழக்குச் சொத்துகளில் வாதிகள் 3/4 பங்கு பெற (வழக்கின் சொத்துகளில் 1 மற்றும் 3-ஆம் இனவெண்கள் தவிர) உரிமையுடையவர்கள் என உயர் நீதிமன்றத்தாலும், விசாரணை நீதிமன்றத்தாலும் வழங்கப்பட்ட எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்புரையும், உத்தரவும் இதன்மூலம் செல்லாததாக்கப்பட்டு, நீக்கறவு செய்யப்படுகின்றன. 1 மற்றும் 3-ஆம் இன வழக்குச் சொத்துகளை தவிர, வேறு சொத்துகளில் வாதிகளுக்கு பங்கேதுமில்லை எனக் கருத்துத் தெரிவித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தினால் உறுதி செய்யப்பட்ட முதல்நிலைத் தீர்ப்புரையானது, தக்கவாறு மாற்றியமைக்கப்பட இதன்மூலம் பணிக்கப்படுகிறது.

தற்பொழுதைய மேல்முறையீடானது மேற்கூறப்பட்ட அளவிற்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை ஏதுமில்லை.

[மாண்புமிகு நீதியரசர் திரு. எல். நாகேஸ்வர ராவ்]

[மாண்புமிகு நீதியரசர் திரு. எம். ஆர். ஷா]

புதுதில்லி;

09.05.2019

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."